பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 7 (19—4—58) வெள்ளி ★ வெளியூர்: சித்திரை 8 (20-4-68) சனி [இதழ்: 256

# 'சனநாயக விரோதச் செயல்'

## 'கட்சியின் நலனுக்காக அதிகார துஷ்பிரயோகம்'

## டில்லி அரசின் நடவடிக்கை பற்றி ஜனசங்கத் தலைவர் கடும் கண்டனம்

புதுடில்லி, ஏப். 18—

"காங்கிரசல்லாத மாநில அரசுகளை ஒன்றன்பின் ஒன்றுகக் கவிழ்ப்பதன்மூலமும், நெருக்கடி நேரங்களில் மட்டுமே பயன்படுத்துவதற்காக அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கட்சி நலனை முன்னிட்டுத் தவருகப் பயன்படுத்துவதன்மூலமும், நாடாளுமன்ற சனநாயகத்தை மத்திய அரசு குலைத்துவருகிறது"

என்று மக்களவையில், ஜனசங்கத் தலைவர் திரு. வாஜ்பாயி கடுமையாகக் குற்றஞ்சாட்டினார்,

உ. பி. சட்டமன்றத்தில் சம்யுக்த விதாயக் தளத்துக்குப் பெரும்பான்மை பலம் இருந்தும், அந்த மாநிலத்தின் ஆளுநரான திரு. பி. கோபால் ரெட்டி, சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தவேண்டும் என்று தெரிவித்த பரிந்துரையை, மத்திய அரசு தள்ளுபடி செய்யாமல் ஏற்றுக்கொண்டதற்காக வருத்தம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து திரு. வாஜ்பாயி பேசினர்.

அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:—

"கடந்த ஓராண்டுக் காலமாக நாட்டில் நடந்துள்ளது, ஒரு துயரந்தரும் கதையாகும்.

குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்ட மாநிலங்களில் உத்தரப் பிரதேசம் நாலாவதாகும்.

**சுதந்தரம் கிடைத்ததிலிருந்து அரசியல் சட்ட 356-வது பிரிவு, 12 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆனல், இரண்டே முறைதான் அது, காங்கிரசுக் கட்சிக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது; மற்ற சமயங்களிலெல்லாம் எதிர்க் கட்சிகளுக்கே பாதகமாகப் பயன்படுத்தப்பட்டது!**

**கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு மிகவும் வலிவிழந்து போய்விட்ட காங்கிரசுக் கட்சி, 'மீண்டும் எப்படியும் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட வேண்டும்' என்று முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.**

காங்கிரசுக் கட்சிக்குச் சாதகம் செய்யும் பொருட்டே இராஜஸ்தான் சட்டமன்றம் இயங்காமல் செய்யப்பட்டது; அதே முறையில்தான் அரியாணு, மேற்கு வங்கம், உ. பி. ஆகிய மாநிலங்களில் சட்டமன்றங்களும் கலைக்கப்பட்டிருக்கின்றன.

**கட்சி மாறும் செயல்கள், ஆளுநர் மாளிகையிலா நடப்பது? இது மிகவும் ஆபத்தான நடைமுறையாகும். யாரேனும் கட்சி மாற விரும்பினல், அவர் விருப்பம்போல் விட்டுவிடவேண்டும்; அப்படிப்பட்டவர்கள் மக்களைச் சந்திக்கவும் தயாராக இருக்க வேண்டும்.**

**நிலையான அரசை அமைக்கக்கூடிய கட்சி எது என்பதை ஆளுநர்கள் எவ்வாறு முடிவு செய்வது? 'எந்தக் கட்சிக்குப் பெரும்பான்மை எண்ணிக்கை இருக்கிறதோ அந்தக் கட்சியை, அரசு நிர்வாகத்தை ஏற்பதற்காக ஆளுநர் அழைக்க வேண்டும்' என்றுதான் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.**

**ஓர் அரசுக்கு நெருக்கடி நிலை ஏற்படும்போது ஆளுநர் மாளிகைகளிலோ, சட்டமன்றக் கூட்டத்திலோதான் தக்க முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.**

**ஆளுநரை மட்டும் குற்றஞ்சாட்டுவதற்கில்லை; இந்தக் குற்றச்சாட்டில் மத்திய அரசுக்கும் பங்குண்டு; ஆளுநரின் பரிந்துரையைத் திருப்பியனுப்பி, மறு ஆய்வு செய்யும்படிக் கூற மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது.**

காங்கிரசுக் கட்சியோ, ச. வி. தளமோ நிலையான ஆட்சியை அமைக்கத் தவறினல், சட்டமன்றம் கலைக்கப்படும் என்று இரண்டு கட்சிகளுக்கும் முன்னெச்சரிக்கை செய்திருக்கலாம்."

## தமிழக அரசின் முறையீட்டு மனு

### தலைமை நீதிமன்றத் தீர்ப்பு

புதுடில்லி, ஏப். 18—

"மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 8-(2), 8-(2) ஏ, 8-(5) பிரிவுகள் செல்லுபடியாகும்" என்று இந்திய தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

"இந்தப் பிரிவுகள், செல்லுபடியாகாதவை" என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது; இதை எதிர்த்துத் தமிழக அரசு செய்திருந்த 'முறையீட்டு மனு'வை தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

## 'உ. பி. ஆளுநரை நீக்க வேண்டும்'

### மக்களவையில் இரா. செழியன் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 18—

உ. பி. மாநிலச் சட்டமன்றத்தைக் கலைக்க, ஆளுநர் தெரிவித்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதுபற்றி வருத்தம் தெரிவிக்கும்வகையில் வாஜ்பாயி கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் பேசுகையில், டில்லி அரசின் சனநாயக விரோதச் செயலைக் கடுமையாகக் கண்டித்தார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"உத்தரப் பிரதேசச் சட்டமன்றத்தைக் கலைத்ததன் மூலம் மத்திய அரசு, ஒரு முறைகேடான வழியைக் காட்டியுள்ளது. சட்டமன்றத்தைக் கூட்டி, 'யாருக்குப் பெரும்பான்மை இருக்கிறது என்பதை முடிவு செய்ய வேண்டும்' என்று, எல்லா உறுப்பினர்களுமே ஏகோபித்துக் கருத்தறிவித்திருந்த போதிலும், ஆளுநர் அதற்கு வாய்ப்பளிக்காமல், குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்த யோசனை கூறியிருக்கிருர்; எனவே, அந்த ஆளுநரையே பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

சட்டமன்றம் இயங்கும் தகுதியை நிர்ணயிப்பதில் ஆளுநர் தம் விருப்பு—வெறுப்புக்கேற்ற வகையில் செயல்படவிடக் கூடாது.

ஒவ்வொரு மாநிலத்திலும் மத்திய அரசு, ஒவ்வொரு விதமாகச் செயல்பட்டிருக்கிறது. இராஜஸ்தான், அரியாணு, மேற்கு வங்கம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில், மீண்டும் காங்கிரசு பதவிக்கு வரவேண்டும் என்பதற்காக, மத்திய அரசு வெவ்வேறு வழிமுறைகளைக் கையாண்டிருக்கிறது.

சனநாயகத்தைக் காக்க் வேண்டுமானல் இத்தகைய செயல்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்."

# நிஜலிங்கப்பாவுக்குக் கேரளம் தரும் பதில்!

## இந்தியை யாரும் ஏற்கவில்லை

### இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுத் தலைவர் விளக்கம்

திருவனந்தபுரம், ஏப். 18—

"இந்திக்கு எதிராக வன்செயல்களில் ஈடுபடாத காரணத்தால், 'கேரளம் இந்தியை எதிர்க்கவில்லை' என்று பொருளில்லை; கேரள மக்களும், இந்திய அரசின் மொழிக் கொள்கையை எதிர்ப்பவர்களே"

என்று, அனைத்துக் கேரள இந்தி எதிர்ப்புக் குழுவின் தலைவர் திரு. எம். என். பரமேசுவரம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

'இந்திய அரசின் மொழிக் கொள்கையை தமிழகம் தவிர வேறு எந்த மாநிலமும் எதிர்க்கவில்லை' என்று காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா கூறியதை மறுக்கும் வகையிலேயே அவர் இதனைக் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—

**"கேரளத்தில் உள்ள வழக்கறிஞர் சங்கங்கள் அனைத்துமே, மொழிக் கொள்கையை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.**

**"மாநிலத்தில் உள்ள 1 400 வழக்கறிஞர்கள் கையெழுத்திட்டுள்ள விண்ணப்பம் ஒன்றும் தலைமையமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.**

**"இந்தியாவின் ஆட்சிமொழியாகவும், உயர்தரக் கல்விக்கான பயிற்று மொழியாகவும் ஆங்கிலமே நீடிக்கவேண்டும் என்று அதில் வற்புறுத்தப்பட்டுள்ளது.**

"மொழிக் கொள்கைக்கு இருந்துவரும் எதிர்ப்பை எடுத்துக்காட்டும் வகையில், ஏராளமான கருத்தரங்குகளும் நடத்தப்பட்டிருக்கின்றன.

**"அண்மையில் இந்த மாநிலத்தில் உள்ள கல்லூரிகளிலெல்லாம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 90 சதவிகித வாக்குகள், 'ஆங்கிலம் நீடிக்கவேண்டும்' என்பதற்கு ஆதரவாகவே கிடைத்தன."**

# 80-காசுக்கு முழுச் சாப்பாடு

## கோவை மாவட்ட கலெக்டர் நடவடிக்கை

கோவை, ஏப். 19—

"கோவை மாவட்டத்தில், சட்டபூர்வமான பங்கீட்டு முறை அமுலாகும் வட்டாரங்களிலுள்ள ஓட்டல்களில் 80 காசுக்கு முழுச் சாப்பாடு போடப்படல் வேண்டும்; ஒவ்வொரு ஓட்டலின் வாயிலிலும் இதை அறிவிக்கும் போர்டு இருக்கவேண்டும்"

என்று, எல்லா ஓட்டல்காரர்களுக்கும் கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலிருந்து உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது.

"அதிகப்படியான உணவு வகைகளுடன் தனிச் சாப்பாடு போடப்படும் இடங்களில் கூட, 80 காசுக்கு சாதாரண சாப்பாடு—முழு அளவில் — போடுவதற்கு மறுக்கக்கூடாது" என்றும் அந்த உத்தரவில் நினைவூட்டப்பட்டிருக்கிறது

80 காசு சாதாரணச் சாப்பாட்டில் என்னென்ன பரிமாறப்படல் வேண்டும் என்பதும் கூறப்பட்டிருக்கிறது; சாதம் (அளவில்லாமல்); சாம்பார்; ரசம்; பொரியல்; கூட்டு; அப்பளம் (ஒன்று அல்லது இரண்டு); ஊறுகாய்; மோர்; ஒரு தேக்கரண்டி நெய்.

இதில் கண்டுள்ளதற்கு மேல் அதிகப்படியாகப் பரிமாறப்படும் வகைகளுக்குத் தனிக் கட்டணம் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான அறிவிப்புப் பலகைகளை ஒரு வாரத்திற்குள் எல்லா ஓட்டல்கள்—உணவு விடுதிகள் வாயிலிலும் வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

# நியூயார்க்கில் அண்ணு

## அமெரிக்க சுற்றுப்பயணம் துவக்கம்

பாரிஸ், ஏப். 19—

**அண்ணு அவர்களின் அமெரிக்கச் சுற்றுப்பயணம், இன்று, நியூயார்க் நகரிலிருந்து தொடங்குகிறது.**

ஏப். 17-ம் நாள் மாலை இத்தாலியிலிருந்து பிரான்சின் தலைநகரான பாரிசுக்கு வந்து சேர்ந்த தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், இங்கு அரசின் விருந்தினராகத் தங்கியிருந்துவிட்டு, இன்று விமானமூலம் அமெரிக்கா புறப்பட்டார்.

இத்தாலியிலிருந்து புறப்படுமுன், போப் அவர்களைத் தாம் சந்தித்துப் பேசியது பற்றி அண்ணு அவர்கள் இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உலக அமைதிக்கு இந்தியா ஆற்றிவரும் பணிகளை போப் அவர்கள் மிகவும் பாராட்டியதாக அண்ணு சொன்னர்.

சென்னையில் நடந்த உலக இரண்டாவது தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட மலரை அண்ணு அவர்கள், போப் அவர்களிடம் அளித்தார்.

"இந்தப் பயணத்தின்போது இலண்டனில் அதிக நாள் தங்க வாய்ப்பிருக்காதுபோல் தோன்றுகிறது; இலண்டனில் தங்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பை நான் ஏற்றுக்கொண்டிருந்தபோதிலும் அதிக நாள் தங்க வசதிப்படாது; பிறகு—அநேகமாக ஜூலைத் திங்களில்—இலண்டனுக்கு வரலாமென்று இருக்கிறேன்"

என்று அண்ணு அவர்கள் தெரிவித்தார்கள்.

நம் நாடு
ஆசிரியர் : இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 7 (19—4—68) வெள்ளி

# அரசியல் இலாபந்தான் குறி!

இந்தியப் பேரரசின் 1968—69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை, நிதிப் பற்றுக்குறைத் திட்டமாக இந்திய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் வெளியிட்டிருக்கின்றார். பேரரசின் பெருஞ் செலவை ஈடுசெய்ய, வழக்கம்போல், ஏற்கனவே விதிக்கப்பட்ட வரி விகிதங்களைக் கூட்டியும், புதிய வரிகளை விதித்தும் உள்ளார்.

வரி விகிதங்களை உயர்த்தியுள்ள இனத்தில், நடுத்தர—ஏழை மக்களைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளவை அஞ்சல் துறை இனங்களாகும். 'உயர்த்தப்பட்டுள்ள இந்தக் கட்டண விகிதங்களைக் குறைக்க வேண்டும்' என, இத்துணைக்கண்டம் முழுவதிலுமிருந்தும் கோரிக்கையும், கண்டனமும் கிளம்பின; இவ்வளவுச்கும் இந்திய நிதி அமைச்சர் அசைந்து கொடுக்கவில்லை; 'கட்டணங்களை உயர்த்தியது உயர்த்தியதுதான்' எனப் பிடிவாதமாகக் கூறி விட்டார்.

இப்படி வரி விகிதங்களைக் கூட்டியும், புதிய வரிகளை விதித்தும் கூட, ஆண்டுக்கு ஆண்டு விரைந்து வளர்ந்து வந்துகொண்டிருக்கும் இந்தியப் பேரரசின் பெருஞ்செலவை, நிதி அமைச்சரால் ஈடு செய்ய இயலவில்லை; எனவே, வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறையாக இருக்கின்ற தொகைக்கு, புதிய நோட்டுகளை அச்சடிக்க நிதி அமைச்சர் முனைந்துவிட்டார்.

கடந்த சில ஆண்டுக்காலமாக, நிதி அமைச்சர் பதவியில் தேசாய் இருந்தாலும் வேறு எவர் இருந்திட்டாலும், அவர்கள் அனைவரும், வரவு–செலவுத் திட்டத்தின் பற்றுக்குறையைச் சரி செய்யத் தேவையான அளவுக்கும் அதற்கு மேலும் நோட்டுகள் அச்சடிப்பதைத்தான் தொடர்ந்து செய்துவந்துள்ளனர். சில பல ஆண்டுக்காலமாகக் கையாண்டுவருகின்ற அதே கோடிக்கணக்கில் நோட்டடிக்கின்ற இலகுவான வழியை, இந்த நிதி அமைச்சரும் இப்பொழுது கையாளத் தீர்மானித்துவிட்டிருக்கின்றார்.

ஆனால், இவ்வாறு புது நோட்டுக்களை வெளியிடுவதில், இம்முறை ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்ய இந்தியப் பேரரசு முடிவு கட்டியிருக்கிறது; அதாவது, இம்முறை வெளியிடப்படவிருக்கின்ற நோட்டுக்கள் இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள நோட்டுக்களை ஒத்திருக்காது. இம்முறை வெளியிடப்படவிருக்கின்ற நோட்டுகளில் 'தேசியப் பிதா' எனச் சிறப்பித்து அழைக்கப்பட்டு வரும் உலக உத்தமர் காந்தியாரின் உருவம் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

காந்தியாரின் உருவம் நோட்டுகளில் அச்சடிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், காந்தியார் உருவம் அச்சடிக்கப்பட்டில்லாத பழைய நோட்டுகளைவிட இப்புதிய நோட்டுகளுக்கு—பொருளாதாரக் கோணத்தில் புதிய மதிப்பு ஏற்படப் போவதில்லை. இந்தக் காலக் கட்டத்தில் பழைய ஐந்து ரூபாய் நோட்டுக்கு எந்த அளவு பண்டங்களை வாங்கும் சக்தி உண்டோ அதே அளவுதான், காந்தியார் உருவம் தாங்கியுள்ள இப்புதிய ஐந்து ரூபாய் நோட்டுக்கும் வாங்கும் சக்தி இருக்கும்.

ஆனால், காந்தியார் உருவத்தைத் தாங்கியுள்ள இப்புதிய நோட்டுகளின்மீது பாமர மக்களுக்குக் கொஞ்சம் மயக்கம் ஏற்படக் கூடும். இப்படி ஏற்படக்கூடிய அரசியல் மயக்கம், சில நாளைக்குக் காங்கிரசுக் கட்சியினருக்கு, வலிவல்ல—சிறிதளவு தெம்பளிப்பதாகத்தான் இருந்திடக்கூடும்.

காந்தியார் உருவத்தைத் தாங்கியுள்ள நோட்டுகளைப் பற்றிக் காங்கிரசுக் கட்சியினர் விதவிதமாகப் பேசி, காங்கிரசுக் கட்சிக்கு மக்கள் ஆதரவைத் தேட முயலுவர்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஆட்சிப் பொறுப்பிலுள்ள கழகத்தை இன்று தூற்றுவதைவிட, அந்த நோட்டுகளைப் பற்றிக் கதை கதையாகக் கூறி மேலும் தூற்றித் திரிவர்—காங்கிரசுக் கட்சியினர்!

காந்தியாரின் உருவத்தைப் போட்டு நோட்டுகளை வெளியிடத் துணிந்துள்ள இந்திய அரசு, உயிருக்குயிரான இலட்சியமெனக் காந்தியாரால் கருதப்பட்டுவந்த மதுவிலக்கை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆட்சிப் பொறுப்பிலிருந்துகொண்டு அழித்தொழித்துவருவதைக் கண்டிக்கத் துணிவில்லாமல் கண்டும் காணாததுபோல் இருந்துவருகிறது. காந்தியார் கொண்டிருந்த இலட்சியத்தைச் செயல்படுத்த விரும்பாத இந்திய அரசு, அதே நேரத்தில் காந்தியார் உருவத்தை நோட்டுகளில் வெளியிட்டு அரசியல் இலாபம் தேடத் துணிந்திருப்பது வியப்புக்குரியதல்ல—வேதனைக்குரியதாகும்.

இப்படித்தான், முன்னாள் தலைமை அமைச்சர் பண்டித நேருவின் மறைவுக்குப் பின்னர், அவர் உருவத்தைத் தாங்கிய எட்டணா நாணயத்தை வெளியிட்டது இந்திய அரசு. அதுவும், அரசியல் இலாபத்தைக் கருதி காங்கிரசு ஆட்சியால் செய்யப்பட்ட ஒன்றாகும். அதே அரசியல் இலாபத்தைக் குறிக்கோளாகக்கொண்டு, காந்தியார் உருவம் தாங்கிய கரன்சி நோட்டுகளை வெளியிட இந்திய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக் கட்சி, இப்பொழுது முனைந்திருக்கிறது. இன்றையக் காங்கிரசுக் கட்சிக்கு இருக்கின்ற பற்று, மறைந்த தலைவர்கள் கொண்டிருந்த இலட்சியத்தின்மீது அல்ல; அவர்களுடைய பெயர்களைக் கூறி--அவர்களுடைய உருவங்களைக் காட்டி அரசியல் இலாபம் தேடுவதில்தான் பற்று--பாசம் அனைத்தும்!

—கா. க.

## ஊரடங்கு உத்தரவு

அலகாபாத், ஏப். 19—

அலகாபாத்தில் கலவரச் சம்பவங்கள் நடந்ததையடுத்து ஊரடங்குச் சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

## சிறு சேமிப்புத் திட்டம்

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியக்கில் 31—3—68 முடிய சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 2,00,244.09 வசூல் செய்யப்பட்டுள்ளது.

# ஆயிரம் ஏக்கர் நிலத்தில் முந்திரித் தோட்டம்

## இலங்கை அகதிகளுக்காகத் திருச்சி மாவட்டத்தில் ஏற்பாடு

திருச்சி, ஏப். 19—

**இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு இங்கு வந்து சேரும் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின் ஒரு கூறாக, திருச்சி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் பரப்பில் முந்திரித் தோட்டம் அமைக்கும் வேலை விரைவில் தொடங்கும்.**

புதுக்கோட்டை ரெவினியூ கோட்டத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவருகிறது.

**இலங்கை அகதிகளுக்காக, கொல்லிமலைப் பகுதியிலும் சிலவகைத் தோட்டங்களை விரைவில் ஏற்படுத்த முயற்சி நடைபெற்றுவருகிறது.**

இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டத்தை நிறைவேற்றிவைக்கும் பொருட்டு, மறுவாழ்வளிப்புத் துறைத் துணை இயக்குநர் ஒருவரை நியமிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படவிருக்கும் தமிழர்களின் முதல் குழுவினர் அடுத்த திங்கள் இங்கு வந்துசேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் இங்கு வரும்போது, இந்த மறுவாழ்வளிப்புத் திட்டமும் செயல்படத் தொடங்கும்.

# உணவு உற்பத்தியில் தமிழக அரசு காட்டும் ஆர்வம்

## மேலும் ஐந்து இலட்சம் ஏகர் நிலத்தில் இரு போகச் சாகுபடி

### மிதுவிளைச்சல் தரும் பயிர்களை அதிக நிலங்களில் பயிரிடத் திட்டம்

சென்னை, ஏப். 19—

நடப்பு ஆண்டில் அதிக விளைச்சல் தரும் பயிர்கள் சாகுபடியின்கீழ் 26.8 இலட்சம் ஏக்கர் நிலத்தைக் கொண்டுவருவதற்கான திட்டங்களை மாநில அரசு வகுத்துவருகிறது.

சென்ற ஆண்டு இரு போக சாகுபடியின்கீழ் 5 இலட்சம் ஏக்கர் நிலம் கொண்டுவரப்பட்டது; நடப்பு ஆண்டில் மேலும் 5 இலட்சம் ஏக்கர் நிலத்தை இரு போக சாகுபடியின்கீழ்க் கொண்டு வரத் திட்டமிடப்பட்டு வருகிறது.

அதிக விளைச்சல் தரும் நெல் மட்டும் 25 இலட்சம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படும். இதற்கு அதிக இரசாயன உரம் தேவை.

சென்ற ஆண்டு ஒரு மாவட்டத்தில் மட்டும் அதிக விளைச்சல் தரும் நெல் சாகுபடியின்கீழ் 5 இலட்சம் ஏக்கர் நிலம் கொண்டு வரப்பட்டது.

அதிக விளைச்சல் தரும் புஞ்சைத் தானிய சாகுபடியின்கீழ் அதிக அளவு நிலத்தைக் கொண்டு வருமாறும், அதிக மகசூல் நெல் சாகுபடியின்கீழ் நிலங்களை கொண்டு வரும் ஏற்பாட்டைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாண்டு இரசாயன உரம் போதிய அளவு கிடைக்கும் எனக் கருதி, அதிக மகசூல் தரும் நெல் சாகுபடியின்கீழ் இன்னும் ஏராள நிலங்களைக் கொண்டுவரும் பணியில் அரசு ஈடுபட்டுள்ளது.

அதிக விளைச்சல் தரும் பயிர்களைச் சாகுபடி செய்பவர்கள்—இரு போக சாகுபடியின்கீழ் பயிர் செய்பவர்கள்—ஏற்றுமதியாகும் தானியங்களைச் சாகுபடி செய்பவர்கள் ஆகியோருக்கும் இரசாயன உரங்களை வாங்கக் கார்டுகள் வழங்கப்படும். மற்ற வகை விவசாயிகள் இந்த உரங்களை வெளி மார்க்கெட்டில் வாங்கலாம்.

இரசாயன உரத் தட்டுப்பாடு எதுவும் இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விதைகள் வழங்குவதிலும் கட்டுப்பாடு எதுவும் இராது என்று கூறப்படுகிறது.

விவசாயிகளுக்கு வர்த்தகப் பாங்கிகள் உதவி கிடைக்கச் செய்வதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 'சேதுக்கடல் - தூத்துக்குடித் திட்டங்களை நிறைவேற்றுக'

## 'சென்னை -- குமரி கடலோரச் சாலை அமைப்பைத் துரிதப்படுத்துக'

### நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் கமலநாதன் வற்புறுத்தல்

புதுடில்லி, ஏப். 17—

**"சென்னையையும் — கன்னியாகுமரியையும் இணைக்கக் கிழக்குக் கடற்கரையோர நெடுஞ்சாலையைக் காலதாமதமின்றி அமைத்து முடிக்கும் பணியை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும்"**

என்று, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் எம். கமலநாதன் வற்புறுத்தினார்.

போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் மானியக் கோரிக்கை மீது நடந்த பொது விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

**"இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பது மிகவும் பயனுள்ளது. 450 மைல் நீளமுள்ள இச்சாலையால் சாலைப் போக்குவரத்து வளர்ச்சியடையும்.**

சேதுசமுத்திரம், மற்றும் தூத்துக்குடித் துறைமுகத் திட்டங்களையும் காலதாமதமின்றி விரைவாக நிறைவேற்ற வேண்டும்."

என்றும், எம். கமலநாதன் வற்புறுத்தினார்.

## அமைச்சர் பதில்

திரு. கமலநாதன் கோரிக்கைகளுக்கு மத்திய அரசு போக்குவரத்துத் துறை துணை அமைச்சர் பகத் தர்சன் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழகத்தில் சென்னையையும்—கன்னியாகுமரியையும் இணைக்கும் கிழக்குக் கரை நெடுஞ்சாலை அமைத்து முடிக்க எல்லா முயற்சிகளையும் மத்திய அரசு எடுத்துக் கொள்வதுடன், தமிழகத்தில் கிராமப்புறங்களில் சாலைகள் அமைக்கவும் மாநில அரசுக்கு உதவிபுரியும்."

போக்குவரத்துத்துறை அமைச்சர் டாக்டர் ராவ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னைத் துறைமுகத்தில், கடலில் மணலைத்தோண்டி எடுத்து, ஆழப்படுத்தும் வேலை நடந்து வருகிறது.

மேலும், ஜப்பானுக்கு இரும்புக் கனியை ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு சென்னையில் தனியாக வெளித் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்படும்.

சென்னையில் மணலியில் அமைந்துவரும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை செயல்படத் துவங்கும்போது மாபெரும் எண்ணெய்க் கப்பல்களை மத்திய அரசு அனுப்பி வைக்கும்; அதற்கான கப்பல்கள் அதற்குள் தயாராக இருக்கும்."

# 'காந்தி - லிங்கனைப்போல் ஆகக் கனவு காணுங்கள்'

## பள்ளி மாணவரிடை கல்வியமைச்சர் அறிவுரை

### கற்றோர் தொகை பெருக செல்வர்கள் உதவக் கோரிக்கை

சென்னை, ஏப். 17—

"புள்ளிவிவரங்களின்படி, நம் மாநிலத்தின் மக்கள்தொகையில் 40 சதவிகிதம் பேர் எழுத்தறிவுள்ளவர்கள் என்று கூறப்படுகிறது; ஆனால் அவர்களது எழுத்தறிவு, கையெழுத்துப் போடும் அளவுக்குத்தான் இருக்கிறது; 14 சதவிகிதம் பேர்கூட உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கவில்லை; ஆறு சதவிகிதம் பேர்தான் கல்லூரிகளை எட்டியிருக்கிறார்கள்; ஒன்றரை சதவிகிதம் பேர்தான் பட்டம் வாங்கியிருக்கிறார்கள்; எனவே, உண்மைப் படிப்பறிவு பெற்றவர் தொகை மிகச் சொற்பமே; எஞ்சிய பெரும்பாலான மக்கள் இவர்களை நம்பியிருக்கிறார்கள்; இந்த நிலைமையில் படித்தவர்களின் பொறுப்பு மகத்தானதாகும்"

இவ்வாறு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பெரம்பூரில், ராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் நிறுவனர் நாள் விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"மாணவ — மாணவியர், சினிமாக்கள் பற்றியும், சினிமா நட்சத்திரங்கள் பற்றியும் கனவு கண்டு கொண்டிருக்கக்கூடாது; 'ஆபிரகாம் லிங்கன், காந்தி போன்ற பெரியார்களைப்போல ஆகவேண்டும்' என்று பகற் கனவு காணவேண்டும்.

"அரசு ஆண்டுதோறும் கல்விக்குச் சுமார் ரூ. 58 கோடி செலவிடுகிறது. இதைத் தவிர, தனியார் நிறுவனங்கள் வேறு செலவிடுகின்றன. இவையெல்லாம் சேர்ந்தும், மக்கள்தொகையில் மிகச் சிறு பகுதியினருக்கே கல்வி வசதி செய்துதர முடிந்திருக்கிறது; எனவே, இன்னும் நிறைய நிதி வசதி தேவைப்படுகிறது; செல்வந்தர்கள் கல்வியைப் பரப்புவதற்காக இன்னும் நிறைய நிதி உதவி புரியவேண்டும்."

# இந்திரா--எதிர்க்கட்சியினரிடை சூடான வாக்குவாதம்

## ஐ. நா.-வில் இந்தியப் பிரதிநிதிகள் பணி பற்றிக் கண்டனக் குரல்கள்

புதுடில்லி, ஏப். 17—

"ஐ. நா. பொதுப் பேரவையில் இந்தியப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது பற்றிய பிரச்சினை இன்று நாடாளுமன்ற மக்களவையில் எழுந்தபோது, தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கும்—எதிர்க் கட்சியினருக்குமிடையே சூடான சொற்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

"ஐ. நா. பொதுப் பேரவைப் பிரதிநிதிகளாக அனுப்பப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தங்கள் அறிவாற்றலை வெளிப்படுத்தாது வீணே பொழுது போக்குகிற நிலைமை இருக்கிறது"

என்று, திரு. பால்ராஜ் மதோக் குறிப்பிட்டதை திருமதி இந்திரா காந்தி மறுத்துரைத்தார்.

"இப்படிச் சொல்லுவது, பிரதிநிதிகளாகச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அவமதிப்பதாகும்" என்றார் இந்திரா காந்தி.

ஐ. நா. பிரதிநிதிகளாகச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டாம்தரத் தகுதி தான் கொடுக்கப்படுகிறது" என்ற கூற்றையும் அவர் மறுத்தார்; 'மாற்றுப் பிரதிநிதிகளைவிட இவர்கட்கு அதிக மதிப்பு உண்டு' என்றார்.

"ஐ. நா.-வில் இந்தியப் பிரதிநிதிகள் இயங்கும் விதம்பற்றி திரு. டி என். திவாரி அண்மையில் தயாரித்த அறிக்கையை அவையில் வைக்க வேண்டும்' என்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை யடுத்து சூடான வாக்குவாதம் நடைபெற்றது.

"ஐ. நா.-வில் உள்ள இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியும், மற்றப் பிரதிநிதிகளும் இயங்கும் விதம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்" என்ற கோரிக்கையை, தலைமையமைச்சர் ஏற்க மறுத்தார்.

இதற்கு அவசியமில்லை என்றும்' நமது பிரதிநிதிகள் அங்கு மிகவும் நன்றாகவே பணியாற்றி வருகின்றனர் என்றும், அவர்களுடைய சிறந்த பணிபற்றி ஐ.நா. பொதுச் செயலாளர் இங்கு வந்திருந்தபோது புகழ்ந்து கூறியிருப்பதாகவும் இந்திரா காந்தி கூறினார்.

"திவாரியின் அறிக்கையை அவையில் வைக்கத் தலைமையமைச்சர் கூச்சப்படுகிறார்' என்று எதிர்க் கட்சியினர் கூறியதைத் தலைமையமைச்சர் மறுத்தார்; திரு. திவாரி எழுதியுள்ள கடிதத்தில், அவர், 'அறிக்கையை அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்' என்றார்.

"ஐ நா. பிரதிநிதிகளாக எந்த அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?' என்று திரு. ஏ. சீதரன் கேட்டார்; 'அப்படித் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் பிரதிநிதிகள், உல்லாசம் அனுபவிப்பதைத் தவிர, வேறொன்றும் உருப்படியாகச் செயலாற்றவில்லை' என்றும் கூறினர்.

வெளிவிவகார துறையமைச்சர் திரு. பி. ஆர். பகத் பதிலளிக்கையில், தகுதி, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ. நா. பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதாகவும், அவர்கள் ஐ நா. பேரவையில் நல்ல பெயரெடுத்துவருவதாகவும் கூறினர்.

"கனம் அமைச்சரைத் தவிர, அறிவுள்ள வேறு எவரும், இப்படி, ஐ.நா.-வில் நமது பிரதிநிதிகள் நல்ல பெயர் பெற்றிருப்பதாகக் கூறமாட்டார்கள்" என்று ஏ. சீதரன் கூறினர்.

ஐ நா.-வுக்குச் செல்லும் பிரதிநிதிகளுக்கும்—நாடாளுமன்ற ஆலோசகர்களுக்குமிடையே அலுவல்களிலும், தகுதியிலும் வேறுபாடு என்ன?" என்று திருமல் ராவ் கேட்டார்.

நடைமுறையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆலோசகர்களாக மாட்டார்கள் என்றும், குழுக் கூட்டங்களில் மற்ற உறுப்பினர்களுக்கெல்லாம் முன்னிடம் பெற்று அமருவார்கள் என்றும் கூறினர் அமைச்சர்.

# மே நாள் விடுமுறை

## தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஏப். 18—

மே முதல் நாள் புதன்கிழமை பொது விடுமுறை என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. அந்தத் திங்கள் 11 ஆம் நாள் வரும் இரண்டாவது சனிக்கிழமையும் அரசு அலுவலகங்கள் அனைத்திற்கும் விடுமுறை நாளாகும்.

### தொழிலகங்களுக்கு வேண்டுகோள்

மே முதல் நாள் வரும் மே நாளன்று எல்லாத் தொழிற்சாலைகளிலும், தொழில்—வணிக நிறுவனங்களிலும் உள்ள தொழிலாளர்களுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

இந்த ஆண்டில் தொழிலாளர்களுக்கு விடப்படவேண்டிய ஏதாவதொரு விடுமுறை நாளுக்குப் பதிலாக இந்த நாளில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்குமாறு அனைத்துத் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் அரசு ஆலோசனை கூறுகிறது.

மே முதல் நாளுக்கு மாற்றாக எந்த விடுமுறை நாளை வேலை நாளாக வைத்துக்கொள்வது என்பது பற்றித் தொழிலதிபர்கள், தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேசி முடிவு செய்துகொள்ளலாம்.

மே முதல் நாளன்று விடுமுறை வழங்குமாறு வணிக நிறுவனங்களின் அதிபர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

போக்குவரத்து—இன்றியமையாத சேவைத் துறைகள்—ஓட்டல்கள்—தொடர் பக்குவத் தொழில்கள் போன்றவற்றைப் பொறுத்தவரையில், எந்த ஒரு விடுமுறைக்கும் பின்பற்றப்படும் வழக்கமான நடைமுறை, இந்த ஆண்டில் மொத்த விடுமுறை நாட்கள் அதிகரிக்காதவகையில் பின்பற்றப்படலாம்.

மே நாளின் முக்கியத்துவத்தையொட்டி இந்த வேண்டுகோளுக்கு அனைத்துத் தொழிலதிபர்களும் செவிசாய்த்து, தங்கள் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவர் என அரசு நம்புகிறது.

### உறுப்பினர் உரிமைச் சீட்டுகள்

# கழகக் கிளைகளின்

## செயலாளர்கள் --- அமைப்பாளர்களுக்கு

### முக்கிய அறிவிப்பு

கழகக் கிளைகளிலிருந்து உறுப்பினர்களைப் பதிவு செய்து தலைமைக் கழகத்திற்கு உரிய கட்டணத்துடன் அனுப்பப்பட்டுள்ள தாள்களைத் தலைமைக் கழகத்தில் பதிவுசெய்து, உரிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் அந்தந்தக் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளர்களாகக் கையொப்பமிட்டு அனுப்பிய தோழர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

அவைகளைப் பெற்றுள்ள கழகக் கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள், உரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அவரவர் சீட்டினை உடனடியாகக் கொடுத்துவிடுமாறு இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கிளைகளுக்கான தேர்தல் நாளாகக் குறிப்பிட்டுள்ள நாளன்று முறைப்படி பதிவுசெய்யப்பட்டுள்ள எந்த உறுப்பினரும், தம்மிடம் உறுப்பினர் உரிமைச் சீட்டு அளிக்கப்படவில்லை என்ற குறைபாட்டுக்கு இடமில்லாத வகையில், கிளைகளின் செயலாளர்கள் அல்லது அமைப்பாளர்கள் ஆவனசெய்ய வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க)

# மத்திய அரசுத் துறைகள் மந்தப் போக்கு!

## பல கோடி ரூபாய் பாழாகும் வேதனை

### பொதுக் கணக்குக் குழு தரும் தகவல்கள்

புதுடில்லி, ஏப். 19—

"1967 ஏப்ரல் வரையில் ரூ. 5.17 கோடி மதிப்புள்ள பறிமுதலான பொருட்கள் சுங்க இலாகாவிடம் விற்கப்படாமல் கிடந்திருக்கின்றன. விற்பதில் ஏற்படும் தாமதத்தால் பொருள்கள் கெட்டுவிடுகின்றன—திருட்டுப் போகின்றன!

"பொருள்கள் கெடுவதன்மூலம் மட்டும்தான் அரசுக்கு நட்டம் ஏற்படுகிறது என்பதில்லை. மூன்று தடவைகளில் விற்பனையில் கிடைத்ததைவிட அதிகமான தொகையை, கிடங்குக்கு வாடகையாகத் தரவேண்டியிருந்தது.

"பறிமுதல் செய்யப்பட்ட பென்சில்களை விற்பதற்குச் சுங்க இலாகாவுக்கு 12 ஆண்டுக்காலமாயிற்று; அதனால் ரூ. 12,000 நட்டம் ஏற்பட்டது."

இவ்வாறு நாடாளுமன்ற மக்களவையில், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் எம். ஆர். மசானி அளித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது; அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாவது:—

"மிக மெதுவாக சுங்க இலாகா செயல்படுவதால், பறிமுதலான பொருட்களை விரைவாக விற்பதற்கு அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கக்குழு ஒன்றை நியமிக்கலாம்.

கார்களை விற்பதில் அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேஷனுக்கு அனுபவம் இருப்பதால், பறிமுதலானகார்களை விற்கும் பணியை அதனிடம் ஒப்படைக்கலாம்.

குளிர்ச் சாதனப் பெட்டிகள், டிரான்சிஸ்டர்கள் போன்றவற்றின் 'முக்கிய பாகங்கள் களவாடப்பட்டு அவைகளை விற்க இயலாத நிலை ஏற்பட்டுவிடுவதால், பாதுகாப்புக்கான ஏற்பாடுகளை மறுபரிசிலனை செய்ய வேண்டும்.

ரூ. 3.89 இலட்சம் மதிப்புள்ள விமானம் இறக்குவதற்கான இயந்திரச்சாதனங்களை ஆருண்டுக்காலம் பொருத்தாமல் சிவில் விமானப் போக்குவரத்து இலாகாவினுல் காலம் கடத்தப்பட்டிருக்கிறது; 'சட்டத்துக்கான நிலம் பாதுகாப்புத் துறையிடமிருந்து மாற்றப்பட்டவில்லை' என, இதற்குச் சமாதானம் கூறப்பட்டது;— இலாகாக்களிடையே பழி சுமத்தும் இப்போக்கை ஏற்பதற்கில்லை.

1962-ல், ரூ. 3.89 இலட்சம் செலவில் இறக்குமதி செய்யப்பட்ட விமானம் இறங்கும் இயந்திரச் சாதனம், சென்னையில் இன்னும் பொருத்தப்படாமலே இருக்கிறது; இது கவலைக்குரிய ஒன்றாகும்.

அஜந்தாவில் உணவு — ஒய்வு விடுதி கட்டுவதில், நான்காண்டு தாமதமும், பயன்படுத்துவதில் ஒன்றரை ஆண்டுத் தாமதமும் ஏற்பட்டிருக்கிறது; அதிருப்தியுறவேண்டிய நிலை இது!"

# பம்பாய்--கொலாபா அறிஞர் அண்ணு மன்றம்

பம்பாய்—கொலாபா அறிஞர் அண்ணு மன்ற நிர்வாகிகள் தேர்தல் தோழர் வி. மணிமாறன் தலைமையில்—தி. மு. க. செயலாளர் கோ. வள்ளுவன் முன்னிலையில் நடைபெற்றபோது, டி. ச. சுந்தரம் தலைவராகவும், தளவை ச. சுப்பிரமணியம் செயலாளராகவும், வி கே. கிருட்டினன் பொருளாளராகவும், ஐ. பன்னீர்செல்வம் துணைச் செயலாளராகவும், 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# சென்னை 43-வது வட்டம் திருவள்ளுவர் மன்றம்

சென்னை 43-வது வட்ட திருவள்ளுவர் மன்ற நிர்வாகிகள் தேர்தல் வட்டச் செயலாளர் வெற்றிவேந்தன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர் : குசேலர் ; செயலாளர்: அ. லியோ ; துணைச் செயலாளர் : கஜேந்திரன் ; பொருளாளர் : மு. துரைராஜ்; செயற்குழு உறுப்பினர்கள் : வின்செட், அமாவாசை, சீனிவாசன், முனுசாமி, அப்புச்சி, பாபு, தனபால், பழனி, சாமுவேல்.

# பெங்களூர் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா

## மா. கி. தசரதன் பங்கேற்பு

பெங்களூர்த் தமிழ்ச் சங்க ஆண்டுவிழா, ஏப். 10-ம் நாள் நடைபெற்றது. திரு. செ. மு. கோபாலகிருட்டினன் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார் ; திரு. ஆ. சி. விசுவநாதன் ஆண்டறிக்கை படித்தார்.

பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் திரு. மா. கி. தசரதன், ஆண்டுவிழாச் சொற்பொழிவாற்றினர் ; தமிழுக்கும்—கன்னடத்துக்கும் உள்ள தொடர்பை எடுத்துக்காட்டி, தமிழ்—கன்னட உறவை வளர்த்துவரும் தமிழ்ச் சங்கப் பணியைப் பாராட்டினர்.

தமிழ்ச் சங்கக் கன்னட வகுப்பு ஆசிரியர் திரு. சேஷப்பாவுக்கு, திரு. தசரதன், பொன்னுடை போர்த்தினர்.

கன்னட எழுத்தாளரும், பத்திரிகை ஆசிரியருமான திரு. நிரஞ்சனு, விழாவுக்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில், ஒற்றுமை உணர்வைப் பேணிக் காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

தமிழ்ச் சங்கம் நடத்திய ஏழாம் வகுப்பு—பத்தாம் வகுப்பு — பல்கலைக்கழக முன்னிலை வகுப்பு—வட்ட வகுப்புத் தமிழ்த் தேர்வுகளில் வரிசை பெற்ற எண்பது மாணவர்களுச்கும், கன்னட வகுப்புத் தேர்வில் வரிசை பெற்ற இருபது மாணவர்களுக்கும் திரு. நிரஞ்சனு பரிசுகள் வழங்கிப் பாராட்டினர்.

தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் க. சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்று, கன்னட ஆசிரியருக்குப் பணமுடிப்பு வழங்கினர்.

# சேலத்தில் அறிஞர் அண்ணு மணி விழாக் குழு

6—4—68-ல் சேலம் சின்னக் கடை வீதியில் இருக்கும் கணேஷ் மில்க் ஸ்டால் கட்டிடத்தில் திரு. . மாணிக்கம் தலைமையில் அண்ணு மணி விழாக் குழு அமைக்கப்பட்டது; செ. மா. தி. அரசு தலைவராகவும், கே. சி. ஆறுமும் செயலாளராகவும், பா. பாண்டுரங்கனை துணைச்செயலாளராகவும், ப. துரைசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரறிஞர் அண்ணு அவர்களின் மணி விழாவை சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், தமிழகத்தின் பெருந் தலைவர்களையெல்லாம் விழாவுக்கு அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### முகவரி மாற்றம்

கூடலரசன்,
70, பாரதியார் தெரு,
மதுரை-10,

வெ கண்ணன்,
வடக்காண்மறைநாடு,
செவல்பட்டி அஞ்சல்,
(வழி) வெம்பக்கோட்டை,
சாத்தூர் வட்டம்,
முகவை மாவட்டம்.

### இரங்கல்

சென்னை—பூங்கா நகர் 64-வது வட்ட தி. மு. க. ஆதரவாளர் ம. முருகேசன் துணைவியார் 1—4—68 அன்று இயற்கையெய்தியமை குறித்து, அன்னர் குடும்பத்தாருக்கு 64-வது வட்ட தி.மு.க. கிளையின் சார்பில், அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சேலம் கழகத் தோழர் கோ. இறைமணியின் தங்கை நிர்மலா (16 வயது) 13—4—68-ல் மருத்துவமனையில் இயற்கை யெய்திய செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

## கட்சி மாறுவதைத் தடுக்கப் புதிய யோசனை!

### சட்டபூர்வமாக்குவதில் அமைச்சரவை ஐயம்

புதுடில்லி, ஏப். 17—

நாடாளுமன்ற — சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறுவதைத் தடுக்க, மத்திய அரசின் சட்ட அமைச்சுத்துறை ஒரு புதிய யோசனையைத் தெரிவித்திருக்கிறது.

நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர் எவரேனும் பணமாகவோ வேறு இலாபகரமான காரியமாகவோ இலஞ்சம் பெற்றுக் கொண்டாலும், கொடுத்தாலும், அதனை ஒரு குற்றமாகக் கருதும் வகையில் சட்டத்தில் வழி செய்யப்பட வேண்டும்.

இதற்கு, இந்தியன் பினல்கோடு அல்லது இலஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தைத் தக்கவகையில் திருத்தலாம். அப்படித் திருத்தப்பட்ட சட்டப்படி, குற்றம் புரிவோர், தண்டனைக் குரியவர்களாவார்கள். சட்டமன்ற உறுப்பினரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ இத் தண்டனையைப் பெற்ருல், உடனே பதவியை இழந்து விடுவார்கள்.

பல்வேறு யோசனைகளையும் ஆராய்ந்த பிறகு, சட்டத்தின் மூலமாக, கட்சி மாறும் செயலைத் தடுக்க சட்ட அமைச்சுத்துறை முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சட்ட அமைச்சுத் துறையின் இந்த யோசனையை, கட்சிமாறுவது சம்பந்தமான உயர்தரக் குழு ஆராயும்.

இந்த யோசனைக்குச் சட்ட உருவம் கொடுக்க முடியுமா என்பது பற்றி அமைச்சரவை ஐயப்பாடு கொண்டுள்ளதாம்.

## காங்கிரசு வெறியர்களால் கரம் துண்டிக்கப்பட்ட கழகத் தோழர்



புதுவை சோரியங்குப்பம் தி.மு.க. வட்டப் பிரதிநிதி கிருஷ்ணன், காங்கிரசு வெறியர்களால் வழிமறித்து அரிவாளால் கரம் துண்டிக்கப்பட்டு மருத்தவ மனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது.

## ஆந்திரத்தில் மற்ருெரு இளைஞன் பலி

### காங்கிரசு ஆட்சியில் ஆதித்திராவிட மக்களுக்குப் பாதுகாப்பில்லை

விசயவாடா, ஏப். 17—

ஆந்திர மாநிலத்தில் சாதி – மத வெறிக்கு மற்ருேர் ஆதித் திராவிட இளைஞன் பலியாக்கப்பட்டிருக்கிருன்.

ஏற்கனவே ஓர் ஆதித் திராவிட இளைஞன் கஞ்சேசகச்சார்லா என்ற கிராமத்தில் உயிரோடு கொளுத்தப்பட்டு மாண்டது நினைவிருக்கலாம்.

அந்தக் கிராமத்துக்கு அருகில் உள்ள மரிக்கொண்டா கிராமத்தில்தான், இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

இந்து பள்ளி வில்சன் என்ற பெயருடைய அந்த இளைஞன், ‘கிறித்துவ மதத்தில் சேர்ந்தான்’ என்ற காரணத்துக்காக அவன்மீது திருட்டுக் குற்றஞ்சாட்டி, அடித்துக் கொன்றிருக்கின்றனர்!

**“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத்தகைய கொடுமைகள் இழைக்கப்படுவதைப் பற்றி உடனடியாக உயர்தரக் குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்த வேண்டும்”**

என்று முன்னுள் ஆந்திர முதலமைச்சர் திரு. டி. சஞ்சீவையா, வற்புறுத்தியுள்ளார்.

அடுத்தடுத்து இப்படி இரண்டு சம்பவங்கள் நடந்திருப்பதைக் கண்டு, மக்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர்.

[தமிழகத்தில் சட்டம்—ஒழுங்கு கெட்டு விட்டதாகத் தொண்டை கிழிய அலறிக் கொண்டிருக்கும் காங்கிரசாரின் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் ஆந்திர மாநிலத்தில் ஆட்சி நடத்துகிருர்கள்; அங்கேதான் சாதி -- மதத்தின் பெயரால் இந்த மிருக வெறிச் செயல்கள் தொடர்கின்றன என்பது குறிப்பிடத் தக்கது.]

## மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு

சென்னை நக்கீரர் கழகச் சார்பில் மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழுக் கூட்டம், சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை அறையில் 20-4-68 மாலை 6-15 மணிக்கு நடைபெறும். ‘தமிழ்க் கடலில் கண்ட ஒளி முத்துக்கள்’ என்ற பொருள் குறித்து அழகரடிகள் சொற்பொழிவாற்றுவார். திரு. சு. செல்லப்பன் எம்.ஏ.,பி.டி. (துணைத் தனி அலுவலர், இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு) தலைமை வகிப்பார்.

## அமைச்சர்கள் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு

### சட்டமன்றக் கலைப்பு---முதலமைச்சருக்கு அதிகாரம்-- புதிய யோசனைக்கு க. அன்பழகன் எதிர்ப்பு

புதுடில்லி, ஏப் 18—

சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதை எப்படித் தடுத்து நிறுத்துவது என்பதைப் பரிசீலனை செய்வதற்காக மத்திய உள்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சி குழுவின் இரண்டாவது கூட்டத்தில்,

“மாநிலங்களிலும், மத்தியிலும் அமைச்சர்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட வேண்டும்; கட்சி மாறியவர்களுக்கு உடனடியாக அமைச்சர் பதவி அளிக்கக்கூடாது; சட்டமன்றத்தைக் கலைத்துவிடும்படி கோருவதற்கு முதலமைச்சருக்கு உரிமை அளிக்கப்படல் வேண்டும்”

என்ற மூன்று யோசனைகள் உருவாகியிருப்பதாகத் தெரியவருகிறது. முதல் யோசனையும், மூன்ருவது யோசனையும் சட்டத்தின் மூலம் அமுலாக்கப்பட வேண்டுமென்றும், இரண்டாவது யோசனை, ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு மரபு மூலம் அமுலாக்கப் படல்வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

### அதிகாரம் தவருகப் பயன்படுத்தப் படக்கூடும்

#### க. அன்பழகன் எதிர்ப்பு

சட்டமன்றத்தைக் கலைப்பதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் வழங்கும் யோசனையை தி. மு. கழக உறுப்பினர் க. அன்பழகன் எதிர்த்தார்; அவர் குறிப்பிட்டதாவது :—

**“இது மிகவும் தீவிரமான நடவடிக்கையாகும்; அது, முதலமைச்சருக்கு அதிக அதிகாரத்தை அளிக்கக் கூடும்; சில சந்தர்ப்பங்களில் இந்த அதிகாரம், தவருகப் பயன்படுத்தப்படவும் கூடும்.”**

கட்சி மாறுபவர்களைத் தண்டிப்பது சம்பந்தமாக சட்ட இலாகா வெளியிட்ட குறிப்பு, குழுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டது; ஆனுல், பொதுக் கருத்து ஏதும் உருவாகவில்லை.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 20--4--68

**சென்னை 65-வது வட்டம்**

கோ.சு. மணி நினைவு மன்றம் — எம். ஜி. ஆர். நூலகச் சார்பில் டாக்டர் அம்பேச்கார் பிறந்ததின விழா; மாலை 6-30 மணிக்கு சேத்துப்பட்டு டோபி கானு அருகில்; தலைவர் : எம். ஏ. பழனி எம்.சி.; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., இளம்பரிதி, கா. முருகேசன், இரா. நடராசன், வே. அரங்கநாதன், செ. அ. தருமன். (காலை 8-மணிக்கு கா.மு.வேலன் தலைமையில் திரு. பி. சிவசங்கரன் எம்.பி , கொடியேற்றுவார்—அம்பேத்கார் உருவப் படத்தைத் திறந்துவைப்பார்).

**வாலாசாபாத்**

1-வது வட்ட சத்தியவாணி முதது மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர் : எம். இரத்தினம்; பேசுவோர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, கே. எம். இராசகோபால் எம். எல். ஏ , என். கிருட்டினன் எம்.எல்.ஏ., வெ. சம்பந்தன், டபிள்யூ. கே. இரத்தினவேலு, ஏ. கே. கோவிந்தராசன், கே. நாகப்பன், வி. கன்னியப்பன்.

**காட்டுப்பாடி**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு வ. உ. சி. பூங்கா வெளியில்; தலைவர் : கே. சி. வரதராசன் பி ஏ.; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ப. உ. சண்முகம், மா. பா. சாரதி எம்.எல்.ஏ , கோ. விசுவநாதன் எம்.பி., ஜி. குசேலர் எம்.பி., ஜி.நடராசன் எம்.எல்.ஏ., பி. கே. முனுசாமி, தோப்பூர் திருவேங்கடம் எம் ஏ , டி சாம்பசிவம், எ. க. துரைசாமி, ச பொன்னரசன், எஸ். கிருஷ்ணன், ஏ. வி. துரைசாமி, இரா. இலக்குவனுர், எஸ். கந்தசாமி.

### 21--4--68

**சென்னை—இராயபுரம்**

பழைய ஆட்டுதொட்டி சாலை தி. மு க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 7-மணிக்கு; தலைவர் : ஏ. முனுசாமி; பேசுவோர் : அமைச்சர் சத்தியவாணிமுத்து, என். வி. நடராசன் எம்.எல்.சி. நீலநாராயணன், இளம்பரிதி, எம். வேதாசலம் எம் எல் ஏ., டி. வெங்கடேசன் எம் சி., கே இராமலிங்கம் எம்.சி.

**சஞ்சங்கொல்லை**

எம் ஜி. ஆர். மன்றத் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு ஐயனுர் கோயில் திடலில்; தலைவர் : வை. கலியபெருமாள் : மன்றத் திறப்பாளர் : கிருட்டினமூர்த்தி; பேசுவோர் : ம. கோ. மணி, க. சொ. கணேசன், வி. நல்லசேவு ஏ. சிவப்பெருமாள், கே. உத்திராபதி.

**கடலூர்**

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில்; தலைவர் : சரோசா செயராமன் எம் சி.; பேசுவோர்: இரெ இளம்வழுதி எம் எல்.ஏ., சி. தமிழரசி பி.ஏ., ஏ. வி. தண்டபாணி, சி. சோவிந்தராசன், பி. கண்ணன்.

**மலைக்குடிப்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணு திடலில்; தலைவர் : ம. பொன்னையா; பேசுவோர் : நன்னிலம் நடராசன், வீ. சா. இளஞ்செழியன் எம் எல்.ஏ., அ. தியாகராசன், க. தங்கராசு, ஏ பி. இராசு, எல். எஸ். மாறன், துரை. பெருமாள், எஸ். சிதம்பரம், ஆர். எம். சொக்கலிங்கம், டி. எஸ். திருமேனி, எம். பிச்சை, சி. செல்லையா, என். எஸ். தங்கவேலு.

**சிவகாசி**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர் : எஸ். சமுத்திரக்கனி; பேசுவோர் : எம். இராசாங்கம் எம்.எல்.ஏ , எஸ். பி. மணியம், ஏ. துரைக்கண்ணன், ஆ. கந்தசாமி, கே. வி. கே. இராசன்.

## கருணாநிதிக்கு மிரட்டல் கடிதம் எழுதிய காங்கிரசு ஆதரவாளர்

### 6-மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது

சென்னை, ஏப். 18—

பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களைக் கொல்லப் போவதாக அச்சுறுத்திக் கடிதம் எழுதிய ஐயாசாமி என்ற காங்கிரசு ஆதரவாளருக்கு, சென்னைத் தலைமை மாகாண மாஜிஸ்திரேட் ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தண்டனையடைந்த ஐயாசாமி என்னும் அந்த இளைஞர், காங்கிரசுக் கடசியின் அமைப்பாகிய ‘வெண்புருச் சேனை’யின் உறுப்பினர் என்று கூறப்படுகிறது.

இ. பி. கோ. 506, 507 ஆகிய பிரிவுகளின்கீழ் எதிரி குற்றம் புரிந்திருப்பதாக, தலைமை மாகாண மாஜிஸ்திரேட் திரு. பலராமையா தமது தீர்ப்பில் கூறினுர்.

## தென்காசித் தொகுதி கழக உறுப்பினர் கூட்டம்

தென்காசி சட்டமன்றத் தொகுதி தி.மு.க உறுப்பினர் கூட்டம், 21—4—68 காலை 11 மணியளவில், தென்காசி கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது வாக்காளர் பட்டியல் பரிசீலிக்கப்படுவதுடன், தேர்தல் பிரசார முறைகளும் வகுக்கப்படும்; கருத்துரைகள் வழங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வந்து கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் அ. இராமநாதன் கேட்டுக்கொள்கிருர்.

## தமிழ் புத்தாண்டு விழா

சென்னை மாநகராட்சி அலுவலர் கழகத்தின் சார்பில் தமிழ்ப் புத்தாண்டு விழா, 20—4—68 மாலை 5-30 மணிக்கு ரிப்பன் கட்டடத்தின் பின்புறம் இருக்கும் ‘உள் விளையாட்டரங்கில்’ நடைபெறும்; மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமைதாங்குவார்; திருவள்ளுவர் உருவப் படத்தை திரு. மே. வீ. வேணுகோபால் திறந்துவைத்துச் சிறப்புரைமாற்றுவார்; விழாவையொட்டி இன்னிசையும், நடனமும் நடைபெறும்.

## பச்சையப்பன் அறநிலைய நிறுவனர் நாள் விழா

பச்சையப்பன் அறநிலைய நிறுவனர் நாள் விழா, 20—4—68 மாலை 5 மணிக்கு சேத்துப்பட்டு பச்சையப்பன் கல்லூரி கட்டிடத்தில் நடைபெறும்; உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே. எஸ். வெங்கட்ராமன் தலைமை வகிப்பார்; குமாரராஜா எம். ஏ. எம். முத்தையா பி. ஏ. உரையாற்றுவார்.

## குழுக் கூட்டங்கள்

முசிறி வட்ட தி.மு.க பிரதிநிதிகள் கூட்டம், 21—4—68 காலை 10 மணிக்கு இராமகிருஷ்ணு திரைப்பட அரங்கில் நடைபெறும்; பிரதிநிதிகள் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஆ துரைராசு கேட்டுக் கொள்கிருர்.

## கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

ஏப். 20 : குன்னூர்; 21 : குடந்தை; 24 : கோட்டூர்; 26 : சின்னமனூர்; 27 : காட்டுநாயக்கன்பட்டி மே. 5 : நாசரேத் 7 : கலையம்பட்டி

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.